சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலன் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிக்குளத்தில் இயங்கிவரும் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு "வ.உ.சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்" எனப் பெயர் மாற்றம் செய்தல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (பக) துறை**

அரசாணை (நிலை) எண். 187

நாள்: 21.08.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054,
சோபகிருது வருடம்,
ஆவணித் திங்கள் – 4 ஆம் நாள்

படிக்க-

1. அரசாணை (நிலை) எண்.709, வேளாண்மைத் (பக) துறை, நாள் 03.04.1984.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சுதந்திரத் திருநாளான 15.08.2023 அன்று அறிவிக்கப்பட்ட அறிவிப்பு.

*****

**ஆணை:**

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், திருநெல்வேலி மாவட்டம் கிள்ளிக்குளத்தில், வேளாண்மைக் கல்லூரியானது துவக்க ஆணை வெளியிடப்பட்டது.

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.08.2023 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் விழாப் பேருரையில், இன்னபிறவற்றுடன், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

> "அதுமட்டுமல்ல, அவர் பிறந்த தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிக்குளத்தில் இயங்கிவரும் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வ.உ.சிதம்பரனார் அவர்களது பெயர் சூட்டப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். இந்த வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு, இந்த ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் பனை ஆராய்ச்சி நிலையம் மற்றும் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைக்க தலா 15 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டதையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்."

(த.பி.பா.)

3. இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிக்குளத்தில் இயங்கிவரும் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இனிமுதற்கொண்டு, "வ.உ.சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்" எனப் பெயர் மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

4. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்கள் மேலே பத்தி 3-ல் உள்ள ஆணைப்படி தக்க நடவடிக்கை மேற்கொண்டு அவ்விவரத்தினை அரசுக்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-641003.
முதன்மைச் செயலாளர் / ஆணையர், சர்க்கரைத் துறை,
சென்னை- 600 035.
ஆணையர், வேளாண்மை இயக்குநரகம், சென்னை- 600 005.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,
சென்னை-600 005.
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை,
சென்னை-600 032.
இயக்குநர் (மு.கூ.பொ), விதை சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை, சென்னை – 600 032.
செயல் இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை-600 032.
தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை,
சென்னை-600 035.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
தலைமைச் செயலாளரின் முதன்மைத் தனிச் செயலாளர், சென்னை-600 009.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை-600 009.
வேளாண்மை – உழவர் நலத் (அ.ந.மு.3 / வ(ம)தி) துறை, சென்னை-600 009.
கோ.எண்.2612/பக/2023.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/08/2023
பிரிவு அலுவலர்
21/8/2023